# ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் உள்ள 6 தொகுதிகளையும் வென்றெடுப்பதே இலக்கு!

## கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 24 -**

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்குத் தலைமையேற்று உரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் உள்ள 6 தொகுதிகளையும் வென்றெடுப்பதே நமது இலக்கு" எனச் சூளுரைத்தார்.**

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (22.11.2024) மாலை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்க இருக்கிறது. அதற்கு நீங்கள் புறப்படுவதற்கு முன், உங்களை ஒரு சேர அழைத்துச் சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

மூன்றாவது முறை ஆட்சி அமைத்த பிறகு பா.ஜ.க.விடம் முன்புபோல பரபரப்பு இல்லை என்று சொன்னாலும், தங்களுடைய அஜெண்டாவை எப்படியாவது நிறைவேற்றுவதில் கவனமாக இருக்கிறார்கள். எனவே, அதற்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது.

நம்முடைய கொள்கைகளில் நாம் எவ்வளவு உறுதியாக இருக்கிறோம் என்று 'இந்தியா' கூட்டணி உறுப்பினர்களுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் பேசுங்கள். நாம் தீர்மானத்தில் சொல்லியிருக்கும் கருத்துகள் பற்றியும் உங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பற்றியும் பேசுங்கள்.

நம்முடைய தீர்மானத்தில், நாம் எதிர்கொண்டிருக்கும் நிதி நெருக்கடி, தமிழ்நாட்டிற்கான தேவைகள் என்ன என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதைப் பற்றி எல்லாம் நீங்கள் பேச வேண்டும். மாநில அரசை நடத்துவதில் நாம் எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்சினையே நிதி நெருக்கடிதான். எனவே, நிதி உரிமைகளை பெறும் வகையில் உங்கள் பேச்சு அமைய வேண்டும். ஒன்றிய அரசின் பெரிய திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதில்லை என்பதைக் குறிப்பிட்டுப் பேசி, புதிய திட்டங்களை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள். இந்தக் குரலை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்ப வேண்டும். மென்மையாகப் பேசக் கூடாது. கடுமையாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியமானதோ, அதைவிடப் பல மடங்கு முக்கியமானது வர இருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தல். சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையான பங்களிப்பைக் கொடுக்க வேண்டும்.

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினர் செயல்பாடுகளை அறிக்கையாகத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் நாடாளுமன்றத் தொகுதிக்குள் இருக்கும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெறுவதுதான் உங்களுக்கான இலக்காக இருக்க வேண்டும்.

எம்.எல்.ஏ., எம்.பி., பதவிகளைவிடக் கழகத்தில் முக்கியமான பதவி என்றால், அது மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புதான். எனவே, அவர்களுக்கு உரிய மரியாதையை நீங்கள் கொடுக்க வேண்டும். அதேபோலதான், ஒன்றிய - பகுதி - பேரூர்க் கழகச் செயலாளர்களும். அவர்களுக்கும் உரிய மரியாதையையும், முக்கியத்துவத்தையும் தந்து, உங்களின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவர்களைப் பங்கேற்க வைக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம் செய்திருக்கிறோம். அவர்களுடன் ஆலோசனை நடத்துங்கள். ஒரு தொகுதியைக்கூட இழக்கக் கூடாது என்று இலக்கு வைத்துக் கொள்ளுங்கள். தொகுதி மேம்பாட்டு நிதியை முழுமையாகப் பயன்படுத்துங்கள். எம்.பி.க்கள் செயல்பாடு சிறப்பாக இருந்தால், நம்முடைய வெற்றி இன்னும் எளிதாக இருக்கும்.

கால அட்டவணைப்படி அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் பயணம் செய்யுங்கள்.

மாநில உரிமைகளுக்காக - தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளுக்காக - தொகுதி மக்களின் தேவைகளுக்காக - உங்கள் நாடாளுமன்றப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துங்கள் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (22.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழகத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் மற்றும் மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**

---

# மாநில உரிமை - நிதி உரிமை காக்க நாடாளுமன்றத்தில் முழங்குவோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற – கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, நவ. 24 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (22.11.2024) மாலை 7.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம்" நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில், "மாநில உரிமை, நிதி உரிமை காக்க நாடாளுமன்றத்தில் முழங்குவோம்!" எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

**அத்தீர்மானம் வருமாறு :-**

கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய பா.ஜ.க. அரசால் தமிழ்நாடு வஞ்சிக்கப் படுகிறது. தமிழ்நாட்டுக்காக மிகப்பெரிய திட்டம் என ஒன்றுகூட செயல்படுத்தப் படவில்லை. அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பற்றி அனைவருக்கும் சொல்லத் தேவையில்லை. நிதி ஒதுக்குவதிலும், திட்டங்களை அனுமதிப்பதிலும் தொடர்ந்து தமிழ்நாட்டின் உரிமை மறுக்கப்படுகிறது. இது மாநிலத்தின் வளர்ச்சியை பாதிப்பதோடு தமிழ்நாட்டு மக்களை இந்தியாவில் ஒதுக்கப்பட்ட பகுதியாக அந்நியப்படுத்துவது மாதிரியான நிலையை பா.ஜ.க. அரசு செய்து வருகிறது.

கடந்த ஆண்டு புயல், வெள்ளம் என இரு பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. 37,907 கோடி ரூபாய் பேரிடர் நிதி கேட்டதற்கு ஒன்றிய அரசு 276 கோடி ரூபாயை 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போல் கொடுக்கிறது. ஒன்றிய அரசு வரிப் பகிர்வில் தமிழ்நாடு அரசை அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள் வஞ்சித்து, நிதி ஒதுக்கீட்டை குறைத்தே வந்திருக்கிறது. நேரடி வரி வருவாய்க்குத் தமிழ்நாடு அரசு 2014-15 முதல் 2022-23 வரை 6.37 லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ள போதிலும் ஒன்றிய நிதிப்பகிர்வு இந்தக் காலகட்டத்தில் 4.75 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே!

மறைமுக வரி வருவாயை எடுத்துக் கொண்டால், தமிழ்நாடு கொடுக்கும் ஒரு ரூபாய்க்கு 29 பைசா மட்டுமே மாநிலத்திற்கு திருப்பித் தரப்படுகிறது.

உற்பத்தியில் முன்னேறியுள்ள மாநிலமான தமிழ்நாடு ஜி.எஸ்.டி வரி விதிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி சட்டத்தால் மாநிலத்திற்கு ஏற்படும் இழப்பீட்டை 30.06.2022-உடன் நிறுத்திவிட்டதால் தமிழ்நாட்டிற்கு 20,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி.யால் மாநிலங்களின் வருவாய் குறைந்து கொண்டிருக்கும் நேரத்தில் ஒன்றிய அரசு மட்டும், தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ள செஸ் மற்றும் சர்சார்ஜ் விதிக்கிறது. ஒன்றிய அரசு செஸ் மற்றும் சர்சார்ஜ் மூலம் 2022-23-இல் வசூலித்துக் கொண்ட 5.1 லட்சம் கோடி ரூபாயை மாநிலங்களுக்குப் பங்கீடு செய்திருந்தால், தமிழ்நாட்டுக்கு 20,800 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். அதையும் செய்யவில்லை.

ஒன்றிய அரசு மாநிலத்தில் செயல்படுத்தும் திட்டங்களில்கூட பெரும்பான்மையான சுமையும் மாநில அரசின் மீதே தூக்கி வைக்கப்படுகிறது. சமூகநீதிக்கு எதிரானதும், இந்தியைத் திணிப்பதும், ஏழை எளிய மக்களுக்கு கல்வித் தடைகளை ஏற்படுத்துவதுமான புதிய தேசியக் கல்விக் கொள்கையின் முரண்பாடான கருத்துருக்களை நாம் எதிர்க்கிறோம், ஏற்கவில்லை என்பதற்காக 'சமக்ர சிக்ஷா' திட்ட நிதியை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளது ஒன்றிய அரசு.

தமிழ்நாட்டிற்கு அறிவிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்குக் கூட நிதி ஒதுக்கப்படாத நிலை நீடித்து தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சட்டப்பூர்வக் கடன் பெறும் உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரித்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள், பேரிடர் நிதி ஆகியவற்றைத் தொடர்ந்து திட்டமிட்டுப் பறித்து, குறைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல் தமிழ்நாட்டின் நிதி உரிமையைப் பாதித்து - மாநில நிதி நிலைமைக்குப் பெருத்த நெருக்கடியை உருவாக்கி இருக்கிறது.

தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அநீதியான செயல்பாடுகள் பற்றி நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் குரல் எழுப்ப, கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் வக்ப் வாரிய திருத்தச்சட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான ஒரேநாடு ஒரேதேர்தல், அரசியல் சட்டம் அளித்துள்ள மாநிலங்களுக்கான அதிகாரங்களையும் அபகரிப்பது, அவசர கதியில் கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்டங்கள், நிதி ஒதுக்கீட்டில் - பேரிடர் நிதி வழங்குவதில் பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளிடம் காட்டும் பாராமுகம், ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் விதமாக நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதி குறைப்பு, இளைஞர்களைத் திண்டாட வைக்கும் 9.2 விழுக்காட்டிற்கு மேலான வேலை வாய்ப்பின்மை, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமையை நீர்த்துப் போக வைக்கும் வகையிலான சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகள் போன்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக, மக்கள், அரசியல் சட்ட விரோதச் செயல்பாடுகளுக்கு எதிராக தி.மு.க.வின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் எதிரொலிப்போம்.

பா.ஜ.க. அரசின் பாசிசத்தன்மைக்கு எதிராகவும், இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநாட்டவும் தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை உறுதியாக எடுப்போம் என இக்கூட்டம் உறுதி அளிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில், தி.மு.க. மகளிரணி சார்பில் நடைபெற்றுவரும் வினாடி வினா போட்டியின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் (22.11.2024 – வெள்ளிக்கிழமை) சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், 18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் சென்னை, சேலம், திருப்பத்தூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, சிவகங்கை, கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு உள்ளிட்ட அணிகளும், 18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், கரூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவாரூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளும் பங்கேற்றனர். இதில், வெற்றிபெற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள இறுதிப்போட்டிக்கு முன்னேறிய அணிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார். தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, தங்க தமிழ் செல்வன், மாவட்ட கழகச் செயலாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம். மைதீன்கான், ஜெயபாலன், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, ராஜா, மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், மகளிரணி சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன், யாழினி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.